# DEPOSITION OF WITNESS

**In the Special Court for trial of cases under Prevention of Corruption Act, Tiruchirappalli.**

**SPECIAL CASE NO.1/2019.**

**Deposition of Witness for Prosecution - P.W.1**

| | | |
|---|---|---|
| Name | : | Thiru A. Sekar. |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

**Solemnly affirmed in accordance with the provision of Act of 1873 of the day of Dated :- 10.02.2020.**

முன் விசாரணை = நான் தற்சமயம் சென்னையில் நில அளவை பிரிவில் கூடுதல் இயக்குநராக பணியாற்றி வருகிறேன். கடந்த 2.11.2016 முதல் 4.10.2018 வரை திருச்சி மாவட்ட நில அளவை பதிவேடுகள் துறையில் உதவி இயக்குநர் மற்றும் மாவட்ட ஆட்சி தலைவரின் நேர்முக உதவியாளராக பணியாற்றி வந்தேன். அப்போது குறுவட்ட அளவையராக சோமரசம்பேட்டையில் பணிபுரிந்த கணேசன், த/பெ. வேங்குடுசாமி என்பவரை பணி நீக்கம் செய்ய எனக்கு அதிகாரம் இருந்தது. மேற்படி கணேசன், அருளானந்தராஜ் என்பவரிடமிருந்து பட்டா மாற்றம் செய்வதற்காக ரூ.50,000/=லஞ்சம் கேட்டு பெற்ற குற்றத்திற்காக நீதிமன்றத்தில் நடவடிக்கை மேற்கொள்வதற்காக இயக்குநர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அவர்களிடமிருந்து குற்ற எண்.11/2017, ஆர்.சி.226/2017/எஸ்.யு.ஆர்/டி.ஆர் சம்பந்தப்பட்ட கடிதம் மற்றும் ஆவணங்களான முதல் தகவல் அறிக்கையின் நகல், வாக்குமூலங்கள், மகசர்கள்,

மற்றும் ஆவணங்களுடன் இணைத்து 23.7.2018 தேதியிட்டதை எங்கள் அலுவலகத்தில் 18.8.2018 அன்று பெறப்பட்டது. நான் மேற்படி வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தேன். பின்னர் இவ்வழக்கின் புலனாய்வு அதிகாரியை 20.9.2018 அன்று எனது அலுவலகத்திற்கு வரவழைத்து வழக்கு சம்பந்தமான ரசாயன பரிசோதனை நகல், ஆவணங்கள் பற்றிய விவரங்களை கேட்டறிந்தேன். பின்பு வழக்கின் அனைத்து ஆவணங்களையும் பரிசீலனை செய்து நான் முழு மனநிறைவடைந்து எதிரி கணேசன் மீது நீதிமன்றத்தில் குற்ற நடவடிக்கை மேற்கொள்ள முகாந்திரம் இருப்பதாக முடிவு செய்து அவர் மீது ஊழல் தடுப்பு சட்டம் 1988 பிரிவு 7, 13 ( 2 ) உ/இ 13 ( 1 ) ( டீ ) ன் படி வழக்கு தொடர இசைவாணையை ஊழல் தடுப்பு சட்டம் 1988, பிரிவு 19 ( 1 ) ( சி ) ன்படி 26.9.2018 அன்று வழங்கினேன். நான் வழங்கிய இசைவாணை அ.த.சா.ஆ.1 ( 5 பக்கங்கள் கொண்டது ) ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது சம்பந்தமாக என்னை திருச்சி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்.

கு.வி. = இல்லை.

ம.வி. = இல்லை.